**<u>நெல்லிக்குப்பம் நகராட்சி</u>**

**<u>நகர் மன்றக் கூட்டம் நிகழ்ச்சி நிரல்</u>**

**2020–ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 11.09.2020ம் தேதி (11.09.2020)** வெள்ளிக்கிழமை மாலை **5.00** மணிக்கு நெல்லிக்குப்பம் நகராட்சி ஆணையர் அறையில் நடைபெற உள்ள நகர் மன்றத்தின் அவசரக் கூட்டத்தில் முடிவு செய்யப்படவுள்ள மன்றப்பொருள்கள் விபரம்.

முன்னிலை : – திரு. எஸ்.பிரபாகரன்
தனி அலுவலர்,
நெல்லிக்குப்பம் நகராட்சி

**<u>மன்றபொருள்.1.</u>** நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் தெருவிளக்குகள் பராமரிப்பு பணிகளை தனியார் மூலம் மேற்கொள்ள மன்ற தீர்மான எண். **325** நாள் **31.12.2019**ன் படி நிர்வாக அனுமதியின் படியும் , நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலக முதன்மை பொறியாளர் , சென்னை அவர்களின் **ரூ. 24.00** இலட்சத்திற்கு தொழில் நுட்ப அனுமதி ந.க.எண். **5881/2020/**DO1 நாள். **05.08.2020**ன் படியும் 02.09.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்ட விபரப்படி வரப்பெற்றுள்ள தொழில் நுட்ப தகுதி வாய்ந்த ஒப்பந்தப்புள்ளிகளை இறுதி செய்ய மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | நெல்லிக்குப்பம் நகராட்சி பகுதியில் உள்ள அனைத்து தெருவிளக்குகள் ஒரு ஆண்டுக்கு இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணி மேற்கொள்ளுதல் | 24.00 | M/s.மல்லிகா எலக்ட்ரிகல்ஸ் & எலக்ட்ரானிக்ஸ், பண்ருட்டி | **0.09%** மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | M/s.ஸ்ரீ முருகன் எலக்ட்ரிகல்ஸ் & ஹார்டுவேர்ஸ், பண்ருட்டி | **0.87%** மதிப்பீட்டு விலை விகிதத்தைவிட அதிகம் |

<u>அலுவலகக்குறிப்பு : –</u> வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான **0.09 %** ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள . M/s.மல்லிகா எலக்ட்ரிகல்ஸ் & எலக்ட்ரானிக்ஸ், பண்ருட்டி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

**(ந.க.எண்.2606/2019/இ1)**

**தீர்மான எண் : 116 அலுவலக குறிப்பினை ஏற்று குறைவான ஒப்பந்தபுள்ளியை ஏற்க அனுமதிக்கப்பட்டது.**

**<u>மன்றபொருள்.2.</u>** தமிழ்நாடு நகர்புற சாலை மேம்பாடு திட்டம் (TURIP) 2020-21ன் கீழ் நெல்லிக்குப்பம் நகராட்சிக்கு ரூ.110.00 இலட்சத்திற்கு ( TURIF Rs. 82.50 Lakhs, நகராட்சி பங்களிப்பு Rs.27.50 Lakhs வீதம் ) நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது . நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல் முறை ந.க.எண். 9025/2020/இ3 நாள். 17.07.2020ல் நிர்வாக அனுமதி மற்றும் நகராட்சி நிர்வாக தலைமை பொறியாளர், சென்னை அவர்களின் தொழில் நுட்ப அனுமதி செயல்முறை ந.க.எண். 25039/2019/DO1 நாள்.22.07.2019 ன் படி 13.08.2020 ல் ஒப்பந்தபுள்ளி கோரியதில் கீழ்கண்ட விவரப்படி வரப்பட்டுள்ள ஒப்பந்தபுள்ளிகளை இறுதி செய்ய மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|---|---|

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண் 2 . வான்பாக்கம் கிருஷ்ணநகர் , வார்டு எண் 9 . திரு,.வி.க சாலை , வார்டு எண் 10 . ராமு தெரு , வார்டு எண் 11 . ராஜிவ் காந்தி நகர் விரிவாக்கம் , வார்டு எண் 14 . திருக்கண்டேஸ்வரம் தோப்பு தெரு & பிள்ளையார் கோயில் தெரு , வார்டு எண் 14 . திருக்கண்டேஸ்வரம் தோப்பு தெரு சுடுகாட்டு சாலை . வார்டு எண் 18 . வைத்தியநாதன் தெரு, வார்டு எண் 23 . காயிதேமில்லத் நகர், வார்டு எண் 23. மௌலானா அப்துல் ரஹமான் தெரு , வார்டு எண் 23. பெரிய தெரு , வார்டு எண் 23. தைக்கால் தெரு , வார்டு எண் 24 . தந்தை பெரியார் தெரு சந்து , வார்டு எண். 26 ரஹமத் நகர் மற்றும் வார்டு எண் 29 . கீழ்பாதி மெயின் ரோட்டில் தார் சாலை அமைத்தல் பணி | 110.00 | M/s.அருணாச்சல அசோசியேட் , நெல்லிக்குப்பம் | **4.93%** மதிப்பீட்டை விட அதிகம் |
| | | | M/s. SVT Constructions கடலூர் | **6.84%** மதிப்பீட்டை விட மிக அதிகம் |

<u>அலுவலகக்குறிப்பு :–</u> வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான **0.01 %** ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள . M/s.அருணாச்சல அசோசியேட் , நெல்லிக்குப்பம் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

**(ந.க.எண் .1506/2019/இ1)**

**தீர்மான எண் : 1117அலுவலக குறிப்பினை ஏற்று குறைவான ஒப்பந்தபுள்ளியை ஏற்க அனுமதிக்கப்பட்டது.**

**<u>மன்றபொருள்.3.</u>** நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு **1** முதல் **30** வரை நகராட்சியால் பராமரிக்கப்படும் தெருமின் விளக்குகளை தனியார் மயமாக்கல் நிபந்தனைகளுக்குட்பட்டு ஒப்பந்த அடிப்படையில் ஒப்படைத்து பராமரித்திட சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல் முறை ந.க.எண்.**48588/2012**/DO3 நாள். **04.09.2013** ன் படியும் மற்றும் நகராட்சி நிர்வாக தலைமை பொறியாளர் , நகராட்சி நிர்வாக ஆணையரகம் , சென்னை அவர்களின் ந.க..எண். **5881** /2020/ DO1 நாள். **05**.08.2020 ன் படி மேம்படுத்தும் பொருட்டு **ரூ.24,00** இலட்சம் மதிப்பீட்டிற்கு ஒப்பந்தபுள்ளி அறிவிப்பு **14.08.2020** அன்று மாவட்ட அளவில் நாளிதழில் விளம்பரம் செய்த வகையில் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் , கடலூர் அவர்கள் மூலமாக கொடுக்கப்பட்டு தினசூரியன் நாளிதழில் அவர்களுக்கு விளம்பரம் தொகை ரூ.**12600/–**ஐ பொது நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு. மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.**2606/2019/E**1)

**<u>தீர்மான எண் : 118 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .</u>**

**<u>மன்றபொருள்.4.</u>** நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட எதிர்வரும் வடகிழக்கு பருவமழை தொடங்க உள்ளதால் புயல் மற்றும் வெள்ள அபாயம் ஏற்படும் நிலையுள்ளது . அது சமயம் நகர பகுதிகளில் ஏற்படும் வெள்ள சேதங்கள் ஏற்படாமல் தடுக்கும் வகையில் மழைநீர் தேங்கியுள்ள பள்ளப்பகுதிகளில் மோட்டார் பம்பு மூலம் தண்ணீர் வெளி ஏற்றவும் , சாலை போக்குவரத்திற்கு இடையுராக கீழே விழும் மரங்களை அப்புறப்படுத்துவதற்கும் ஏதுவாக மரம் அறுக்கும் இயந்திரங்கள் மூலம் அகற்றவும் , பள்ளப்பகுதிகளில்

மழைநீர் தடுப்பதற்கு தேவையான மணல்மூட்டைகள் மற்றும் சவுக்கு கழிகள் வாங்கி உபயோகபடுத்த வேண்டியுள்ளது . மேற்படி பணியின் அவசர மற்றும் அவசியம் கருதியும் , வெள்ள அபாயத்தை தடுக்கும் வகையிலும் மற்றும் பொது மக்கள் நலன் கருதியும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்க வேண்டியுள்ளது . இதற்கு தேவையான மோட்டார் பம்புகள் , மரம் அறுக்கும் இயந்திரம் , மணல் மூட்டைகள் , சவுக்கு கழிகள் , மின்தடை ஏற்படும் போது பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க வாடகை மின் ஆக்கிகள் மற்றும் சாலையில் தேங்கும் மழைநீர் மற்றும் மரங்களை அப்புறப்படுத்துவதற்கு வாடகை JCB இயந்திரங்கள் எடுத்தல் போன்ற பணிகளை செய்ய வேண்டியுள்ளது . இதற்கு தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.3,00,000 ஐ குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு. 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. வெள்ள நிவராண பணி நிதி அரசிடமிருந்து வரப்பெற்றால் இச் செலவினத்தை ஈடு செய்து கொள்ள மன்றம் அனுமதிக்கலாம் .

(ந.க.எண் .2457/2019/E1)

<u>**தீர்மான எண் : 119 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .**</u>

<u>**மன்றபொருள்.5.**</u> இந்நகராட்சியில் 20.05.1997 முதல் 11.03.2002 வரை மருத்துவ அலுவலராக பணிபுரிந்து ஓய்வு பெற்ற திருமதி. மரகதம் சீனிவாசன் என்பவரின் ஆறாவது ஊதியக்குழு நிலுவை மற்றும் வட்டித் தொகை வழங்கக் கோரி விண்ணப்பித்திருந்தார். அவருக்கு ஏற்கனவே முதல் தவணை 19.10.2006 ல் ரூ.17,383/— இரண்டாவது தவணை 10.6.2008 ல் ரூ.26,463/— ம் வழங்கப்பட்டது என்பதை அவருக்கு கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டது. ஆனால் அவர் மாண்புமிகு மனித உரிமை ஆணையம் மற்றும் உள்ளாட்சி முறைமன்ற நடுவம் மூலம் ஆறாவது ஊதியக்குழு நிலுவை தொகை மற்றும் வட்டி எதுவும் வழங்கவில்லை என கடிதம் அனுப்பி இருந்தார். மேற்படி மாண்புமிகு மனித உரிமை ஆணையத்திற்கும், உள்ளாட்சி முறைமன்ற நடுவத்திற்கும் திருமதி. மரகதம் சீனிவாசன், அவர்களுக்கு தொகை வழங்கிய விபரம் அனுப்பப்பட்ட பிறகு மனித உரிமை ஆணையம் அவரது மனுவை தள்ளுபடி செய்து உத்திரவு வழங்கியது. அதன் பிறகு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களிடமிருந்து திருமதி. மரகதம் சீனிவாசன், அவர்களுக்கு ஆறாவது ஊதியக்குழு நிலுவை மற்றும் வட்டித் தொகை வழங்க கடிதம் வரப்பெற்றது. மேற்படி இந்நகராட்சி அலுவலரைக் கொண்டு பதிவேடுகள் மற்றும் கோப்புகள் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களால் சரிபார்க்கப்பட்டு அவர்களின் பரிந்துரையின் படி நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள் 01.01.2007 முதல் 31.03.2008 வரையான காலத்திற்கு வட்டி வித்தியாசத் தொகையான ரூ. 880/— வழங்க உத்திரவு வழங்கப்பட்டது. எனவே, திருமதி. மரகதம் சீனிவாசன், மருத்துவ அலுவலர் (ஓய்வு) அவர்களுக்கு வட்டி வித்தியாசத் தொகை ரூ.880/— பொது நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டு தொகை வழங்கியதற்கு மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

<u>ந.க.எண்: 396/2019/B2</u>

<u>**தீர்மான எண் : 120 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .**</u>

<u>**மன்றபொருள்.6.**</u> வடக்கிழக்கு பருவமழை துவங்க உள்ளதினால், நகர் பகுதியில் உள்ள குடியிருப்புபகுதியில் மழைநீர் தேக்கமின்றி செல்லுகின்ற விதமாக முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மழை நீர் செல்லும் பிரதான கால்வாய்கள் செயின் டோசர் மூலம் சுத்தம் செய்து, தூர்வாரி தயார் நிலையில் வைத்திடும்போது மழைநீர் தங்கு தடையின்றி செல்ல ஏதுவாக இருக்கும். எனவே கோட்டம் — 1ல் உள்ள பிரதான கால்வாய்கள் செயின் டோசர் மூலம் சுத்தம் செய்து தூர் வாரும் பணி மேற்க்கொள்ள செயின் டோசர் வாடகை அடிப்படையில் எடுத்திடுவதற்கு ஒப்பந்தப் புள்ளி கோரவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.2.50 லட்சத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். 2334/2020/எச்1

<u>**தீர்மான எண் : 121 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .**</u>

**<u>மன்றபொருள்.7.</u>** நகராட்சி பொது சுகாதாரம் – தற்சமயம் வடகிழக்கு பருவமழை துவங்க இருப்பதினால், நகர் பகுதியில் உள்ள குடியிருப்பு பகுதிகளில் மழைநீர் தேங்கா வண்ணம், மழை நீர் சரிவர செல்ல வேண்டி வார்டு பகுதிகளில் உள்ள பிரதான கால்வாய்களில் வளர்ந்து இருக்கும் செடி, கொடிகள் அகற்றி தூர் வாரிடும் பணியினை மேற்கொள்ள JCB வாகனம் நகராட்சியில் இல்லாத காரணத்தினால், வாடகை அடிப்படையில் எடுத்து பணி மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரவும், அதேபோன்று மழை பொழியும் சமயத்தில் பொதுமக்கள் எவரேனும் மழைநீர் தேக்கம் உள்ளதாக புகார் தெரிவிக்கும் சமயத்தில் JCB வாகனம் எடுத்து சென்று மழைநீர் செல்ல வழிவகை செய்திடும் பணிக்கும் JCB வாடகை எடுத்து பணி மேற்கொள்ளவும் உத்தேச செலவினம் ரூ.2.50 லட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.2335 /2020/எச்1

**<u>தீர்மான எண் : 122 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .</u>**

**<u>மன்றபொருள்.8.</u>** தற்சமயம் தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை துவங்க உள்ளதினால், மழை பெய்யும் சமயத்தில் நகர் பகுதியில் உள்ள குடியிருப்பு பகுதிகளில் மழைநீர் எதுவும் தேக்கமின்றி முழுமையாக செல்லும் வகையில் மழைநீர் செல்லக்கூடிய கோட்டம் – 2ல் உள்ள பிரதான கால்வாய்களில் உள்ள செடி, கொடிகள் அகற்றி தூர் வாரும் பணி மேற்கொள்ள செயின் டோசர் தேவைப்படுவதினால், ஒப்பந்ததாரர்கள் மூலம் வாடகை அடிப்படையில் தூர் வாரும் பணி மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரிடவும், கோட்டம் – 2ல் உள்ள பிரதான கால்வாய்கள் செயின் டோசர் மூலம் தூர் வாரிடும் பணிக்கு செயின் டோசர் வாடகை அடிப்படையில் எடுக்கப்படும் வாகனத்திற்கு உத்தேச செலவினத் தொகை ரூ.2.50 லட்சத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். 2336/2020/எச்1.

**<u>தீர்மான எண் : 123 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .</u>**

**<u>மன்றபொருள்.9.</u>** இந்நகராட்சி பகுதியில் கொரோனா தடுப்பு பணியினை மேற்கொள்ள வார்டு பகுதியில் உள்ள குடியிருப்புகள் மற்றும் வணிக நிறுவனங்களில் கிருமிநாசினி அடித்திட வேண்டி ஆணையர் அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண்.1030/2020/எச்1 நாள்.23.04.2020ன்படி நகராட்சி ஒப்பந்ததாரர் திருமதி.எஸ்.புவனேஸ்வரி அவர்கள் 3000 லிட்டர் லைசால் சப்ளை செய்துள்ளதினை நகராட்சி பொது சுகாதாரம் கொரோனா நோய் தடுப்பு நடவடிக்கைகள் – இருப்பு பதிவேடு பக்க எண்.8ல் பதிவு செய்யப்பட்டு, வார்டில் ஒப்படைப்பு செய்யப்பட்டது. எனவே அதற்கான தொகை ரூ.5,20,800/–யை தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு–15ன்கீழ் திருமதி.எஸ்.புவனேஸ்வரி என்பவருக்கு வழங்க மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: மன்றம் பதிவு செய்யலாம்.

ந.க.எண்.1030/2020/எச்1

**<u>தீர்மான எண் : 124 அலுவலக குறிப்பினை ஏற்று பதிவு செய்யப்பட்டது .</u>**

**<u>மன்றபொருள்.10.</u>** இந்நகராட்சி பகுதியில் கொரோனா தடுப்பு பணியினை மேற்கொள்ள வார்டு பகுதியில் உள்ள குடியிருப்புகள் மற்றும் வணிக நிறுவனங்களில் கிருமிநாசினி அடித்திட வேண்டி ஆணையர் அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண்.1030/2020/எச்1 நாள்.23.04.2020ன்படி நகராட்சி ஒப்பந்ததாரர்திருமதி.எஸ்.பரிமளா என்பவர் பிளீச்சிங் பவுடர் – 5000 கிலோகிராம், நீர்த்த சுண்ணாம்பு – 15000 கிலோ கிராம் நகராட்சிக்கு சப்ளை செய்ததினைகொரோனா தடுப்பு– பொருள்கள் இருப்பு பதிவேடு பக்க எண்.68 மற்றும் 78ல் பதிவு செய்யப்பட்டு, துப்புரவு பணி மேற்பார்வையாளர் வசம் ஒப்படைப்பு செய்யப்பட்டது. எனவே, அதற்கான பட்டியல் தொகை ரூ.4,80,480/– யை தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு–15ன்கீழ் திருமதி.எஸ்.பரிமளா என்பவருக்கு வழங்க மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: மன்றம் பதிவு செய்யலாம்.

ந.க.எண்.1030/2020/எச்1

**<u>தீர்மான எண் : 125 அலுவலக குறிப்பினை ஏற்று பதிவு செய்யப்பட்டது .</u>**

தனி அலுவலர்,
நெல்லிக்குப்பம் நகராட்சி